IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW7

Defense :

Name : தர்மலிங்கம்

Father's Name : இராமசாமி

Village :

Taluk : ஆரணி

Caste :

Calling : ராணுவம் ஓய்வு

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2025.

**முதல் விசாரணை**

**1. எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

2. நான் தற்போது நெம்பர் 18C பிரகாசம் தெரு பாரதியார் தெரு ஆரணியில் குடியிருந்து வருகிறேன். நான் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். எதிரி அன்புவேலை எனக்கு தெரியும். 20.03.2021 அன்று இரவு 07.30 முதல் 08.00 மணிக்குள்ளாக நானும் ரமேஷ்வும் எதிரி அன்புவேல் வந்திருப்பதாக கேள்விப்பட்டு சைதாப்பேட்டைக்கு சென்றோம்.

3. நாங்கள் சென்ற போது சைதாபேட்டை பஸ் ஸ்டேன்ட் அருகில் போலீஸ் அன்புவேலை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அன்புவேலை போலீசார் கைது செய்யப்போவதாக சொன்னார்கள். அப்போது அன்பு வேல் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் அன்பு வேல் பூங்காவனத்தை கொம்பால் அடித்து விட்டதாக சொன்னார். அடிக்க பயன்படுத்திய கட்டையை பஸ் ஸ்டேன்டில்லேயே போட்டு விட்டு வந்துவிட்டேன் என்று போலீசாரிடம் எதிரி சொன்னார். போலீசார் எதிரி சொன்னதை பஸ் ஸ்டேன்டிலேயே தட்டச்சு செய்தார்கள்.

4. போலீசார் எதிரியை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலத்தில் என் முன்னிலையிலும் மற்றும் ரமேஷ் முன்னிலையிலும் பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்

ரமேஷ்வும் சாட்சி கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என் சாட்சி கையெழுத்து மட்டும் **அ.தா.சா.ஆ8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அன்புவேல் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

__குறுக்கு விசாரணை__

1. எதிரி அன்புவேல் எனக்கு சீட்டு பணம் பாக்கி தரவேண்டும் என்பதற்காக தான் எதிரி வந்திருப்பதாக கேள்வி பட்டு அவரை பார்ப்பதற்கு சைதாபேட்டை பஸ் ஸ்டேன்ட் சென்றோம். அந்த சீட்டு 2019 ல் ஆரம்பித்து 2021 ம் வருடம் முடிந்தது. மாதம் நினைவில்லை. ரூ.5,00,000/-ற்கான ஒரு சீட்டும் ரூ.10,00,000/-ற்கான ஒரு சீட்டும் போடப்பட்டது. சீட்டு முடிவடைந்து நான்கு ஐந்து வருடங்கள் கழித்து நாங்கள் எதிரியை பார்க்க சைதாபேட்டை வந்தோம்.

2. இந்த இடைப்பட்ட 5 வருடங்கள் எதிரி ஊரில் இருந்தாரா என்றால் இருந்தார். வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு வரையில் எதிரி சைதாபேட்டையில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்ற பிறகு எதிரி ஆரணி வரவில்லை என்றால் சரிதான். நான்கு ஐந்து வருடங்களாக நான் எதிரியிடம் சென்று அவரது வீட்டில் பணத்தை கேட்டேனா என்றால் கேட்க சென்றேன் ஆனால் எதிரி வீட்டில் இருக்க மாட்டார். அவ்வாறு நான் எதிரியின் வீட்டிற்கு சென்ற சமயங்களில் எல்லாம் அவர் வீட்டில் இல்லை.

3. எதிரி சீட்டு பாக்கி தரவேண்டும் என்பதற்காக அவர் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி நீண்டகாலமாக சீட்டு நடத்தி வருகிறார் என்பதாலும் அதனால் சீட்டு பணத்தை எதிரி கொடுத்து விடுவார் என்ற நம்பிக்கையினாலும் தான் நான்கு ஐந்து வருடங்கள் காத்திருந்தேன் என்றால் சரிதான். போலீசார் நான் கையெழுத்து போட்டு கொடுத்தால் தான் எதிரியிடம் இருந்து பணத்தை திரும்ப பெற முடியும் என்று சொன்னதால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

4. எதிரி கொடுக்க வேண்டிய சீட்டு பாக்கிக்காக எனக்கு 3 காசோலைகள் கொடுத்தார். அந்த காசோலைகள் வங்கியில் போதுமான பணம் இல்லை என்று திருப்பி வந்துவிட்டது. அவ்வாறு திருப்பப்பட்ட காசோலைகளின் மீது நான் எந்தவிதமான சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தவிர்க்க வேண்டி ஒரு பொய்யான புகார் பெறப்பட்டது என்றும் எதிரி எனக்கு சீட்டு பாக்கி தர வேண்டி இருந்ததால் எதிரிக்கு எதிராக நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல.